வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண். 265/ஆ1/2024 நாள். 20.03.2024.

பொருள்: பள்ளிக் கல்வி – 2023 – 2024ஆம் கல்வி ஆண்டிற்கான அனைத்து அரசு/நகராட்சி/ ஆதிதிராவிடர் நலம் மற்றும் நிதியுதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செலுத்த வேண்டிய (1) மருத்துவ ஆய்வுக்குகுழு (2) பாரத சாரண சாரணியர் இயக்கம் (3) ஜூனியர் ரெட் கிராஸ் கமிட்டி ஆகியவற்றிற்கான கட்டணம் செலுத்த தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல் – சார்பு

------

மேற்காண் பொருள் சார்பாக 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான அனைத்து அரசு/ நகராட்சி / ஆதிதிராவிடர் நலம் மற்றும் நிதியுதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் அனைத்தும் வேலூர் மாவட்டம், காட்பாடி காந்திநகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலக கூட்ட அரங்கில் செலுத்த வேண்டிய கட்டண விவரம் கீழ்கண்டவாறு :

1. **மருத்துவ ஆய்வுக்குழு (Medical Aid Committee)**
   ஒரு மாணவருக்கு ஒரு ரூபாய் வீதம் பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களுக்கு ஏற்ப கட்டணம் செலுத்தப்பட வேண்டும்
   **தொடர்பு அலுவலர்**
   திரு.உமாதேவன்,
   தலைமை ஆசிரியர்,
   அரசு மேல்நிலைப்பள்ளி,
   பென்னாத்தூர்
   கைபேசி எண்.9894235031

2. **பாரத சாரண சாரணியர் ( Bharat Scouts and Guides)**
   ஆண்டு இணைப்பு கட்டணம் பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 800 மட்டும்
   **தொடர்பு அலுவலர்,**
   திரு.பி.சங்கர்,
   தலைமை ஆசிரியர்,
   அரசு மேல்நிலைப்பள்ளி,
   ஜங்காலப்பள்ளி

3. **ஜூனியர் ரெட் கிராஸ் ( Junior Red Cross)**
   மாணவர் ஒருவருக்கு (ரூபாய் 2.00 வீதம் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்பவும் ரூ.4.00 வீதம் 9 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்பவும்) கணக்கிட்டு அத்தொகையில் 10 சதவீதமும் மற்றும் கூடுதலாக இணைப்பு கட்டணம் ரூ.50 மட்டும் செலுத்தவேண்டும்.

   **தொடர்பு அலுவலர்,**
   திரு. செ.நா.ஜனார்தனன்,
   தொழிற்கல்வி ஆசிரியர்,
   அரசு (பெண்கள்) மேல்நிலைப்பள்ளி,
   காட்பாடி, வேலூர்
   கைபேசி எண்.9443345667

எனவே 23.03.2024 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை உரிய தொடர்பு அலுவலரிடம் தொகையினைச் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள அனைத்து அரசு மற்றும் நிதி உதவி உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் 632 009.

பெறுநர்,
அரசு / நகராட்சி /ஆதிதிராவிடர் நலம் மற்றும் நிதியுதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள். வேலூர் மாவட்டம்.